2022 ஏப்ரல் 18] [திரு. துரைமுருகன்]

ஒரு நிலைமை இருக்கிறது. நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எப்படி வருமென்று நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால், இந்தச் சட்டம் இன்னும் முழுமையாக வரவில்லை. அதை Chief Secretaries எல்லாம் கலந்துதான் பேசுவார்கள். ஆகையினால், Dam Safety Act-னுடைய power-ஐ முல்லைப் பெரியாறு சம்பந்தமாக அமைக்கப்பட்டுள்ள Supervisory Committee இடம் ஒப்படைப்பதற்கு, தமிழ்நாடு ஒத்துக்கொள்கின்றதா என்பதுதான் பிரச்சினை. இந்தப் பிரச்சினையில், நாம், நம்முடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், இதுசம்பந்தமாக அவர்களுக்கு நாம் letter அனுப்ப வேண்டும். ஆகையினால், இது குறித்துத்தான் நீங்கள் சொல்ல வேண்டும். ஆனால், நிலைமை என்னவென்றால், வேறு வழி கிடையாது. இதை நாங்கள் வழக்கறிஞர்களிடம் சொல்லிப் பார்த்தோம்; பேசிப் பார்த்தோம். அவர்களெல்லாம் நமக்கு இதைத் தவிர வேறு வழியே கிடையாது என்று சொல்கிறார்கள். இன்னும் இரண்டொரு நாட்கள் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களோடு கூடி பேசிவிட்டு, அதற்குப் பிறகு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவொரு முக்கியமான பிரச்சினையாகும். மற்றபடி நீங்கள், அந்த dam–ஐக் கட்டினார்கள்; இந்த dam–ஐக் கட்டினார்கள் என்று சொல்வதெல்லாம் பழைய காலத்து கதை. ஆகையினால், உங்கள் அம்மா சொன்னார்களா? எங்கள் அய்யா சொன்னார்களா என்று வேறு ஏதாவது ஆரம்பித்தால், மறுபடியும் பெரிய தகராறாக ஆகிவிடும். அதனால், அது தேவையில்லை. இதுதான் இன்றைக்கு இருக்கிற முக்கியமான பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி, அவர் என்ன முடிவெடுக்கிறாரோ, அந்த முடிவிற்கு நாம் கட்டுப்படுவோம். இதுதான் நிலைமை. நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–55

(ஆ) கெயில் நிறுவனம் எண்ணெய் மற்றும் எரிவாயுக் குழாய்கள் அமைப்பதிலே ஏற்பட்ட பிரச்சினையால் விவசாயி தற்கொலை-நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கெயில் நிறுவனம் விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய்களை அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், திரு. வி.பி. நாகைமாலி, திரு. மா. சின்னதுரை, திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து,

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கரியப்பனஹள்ளி கிராமத்தைச் சார்ந்த கணேசன் என்ற விவசாயி தன்னுடைய ஒரு ஏக்கர் நிலத்தில் கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாய்களைப் பதிக்க முன்வந்த நேரத்தில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். அதிகாரிகள் விடா முயற்சியில் ஈடுபட்ட காரணத்தால், அதிர்ச்சியுற்ற நிலையில், தற்கொலை செய்துகொண்டிருக்கிறார். அவர் ஒரு சாதாரண விவசாயி. அவரின் தற்கொலை குறித்து, அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தோம். அவ்வாறு கொடுத்திருந்த நேரத்தில், நாங்களெல்லாம் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு முன்பாகவே, இந்தச் செய்தியை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேற்று மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களை அங்கே அனுப்பி வைத்து, அந்தக் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாயை நிவாரண நிதியாக வழங்க ஆணையிட்டு, காசோலை வழங்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியர் மற்றும் நாங்களெல்லாம் அங்கே சென்றிருந்தோம். கருணை உள்ளத்தோடு அந்தக் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், நன்றியையும், வணக்கத்தையும் முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், கெயில் நிறுவனம் விவசாயிகளோடு அடிக்கடி மோதிக் கொண்டேயிருக்கிறது. கேரள மாநிலத்தில் செல்வதைப் போல, கர்நாடக மாநிலத்தில் செல்வதைப் போல, தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி எரிவாயுக் குழாய்கள் செல்லலாம் என்பதுதான் விவசாயிகளுடைய கோரிக்கை. அவற்றையெல்லாம் அரசு நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். அதேநேரத்தில், இறந்த கணேசன் என்ற சாதாரண விவசாயி ஒரு ஏக்கர் நிலம் வைத்திருந்தார். அவருடைய வீட்டை மாண்புமிகு அமைச்சர் மற்றும் நாங்களெல்லாம் நேற்று போய்ப் பார்த்தோம். சாதாரண ஒரு தட்டி வீடுதான். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, அவர்களுக்கு

2022 ஏப்ரல் 18] [திரு. ஜி.கே. மணி]

வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். படித்த 3 குழந்தைகள் இருக்கிறார்கள். படித்த ஒரு பெண்ணுக்கு திருமணம் செய்யப்பட்டு, கணவர் விபத்தில் மரணம் அடைந்துள்ளார். குழந்தைகூட இல்லை. அந்தப் பெண்ணை வீட்டிற்கு திருப்பியனுப்பிவிட்டார்கள். அந்த விவசாயிக்கு ஒரு மகன் 10-வது மற்றும் இன்னொரு மகள் 12-வது படிக்கிறார்கள். அவர்கள் படிப்பதற்கு உதவியும், அவர்களில் ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெயில் நிறுவனம் ஏழையெளிய விவசாயிகளுடைய நிலங்களில் குழாய்களைப் பதிக்கிறபொழுது, அவர்கள் மிகவும் துயரமடைகிறார்கள். விளைநிலங்கள் பாதிக்கப்படுவதால், அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி எரிவாயுக் குழாய்களைக் கொண்டு செல்கிறார்கள். அதேபோல, தமிழ்நாட்டிலும் கெயில் நிறுவனம் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி எரிவாயுக் குழாய்களைப் பதிப்பதற்கு நம்முடைய அரசு உடனடியாக முயற்சி செய்ய வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெயில் நிறுவனம், எரிவாயுக் குழாய்களை கேரள மாநிலம் கொச்சியிலிருந்து கர்நாடக மாநிலம் தேவன்குந்தி வரை போடுவதற்கு, தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள விவசாய நிலங்களிலே பதிப்பதால், அதை எதிர்த்து விவசாயிகள் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, இதே அவையில் விவசாய விளைநிலங்களிலே எரிவாயுக் குழாய்களைப் பதிக்கக்கூடாது என்ற கவன ஈர்ப்பைக் கொண்டு வந்தார். சட்டமன்றத் தேர்தல் பரப்புரையிலும், இந்த

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2022 ஏப்ரல் 18

அரசு அமையும்பட்சத்தில், விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய்களைப் பதிக்க விடமாட்டோம் என்று மக்கள் மத்தியில் வாக்குறுதி அளித்திருந்தார்.

நண்பகல் 12–00

அந்தவகையில், கடந்த சில தினங்களுக்கு முன்பாக தருமபுரி மாவட்டம், கரியப்பனஹள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் அவர்களுடைய நிலத்தில் GAIL நிறுவன அதிகாரிகள் அளவை செய்யும்போது, அவர் அதை எதிர்த்திருக்கிறார். அந்த நிறுவனம் அதைப் பொருட்படுத்தாமல் அவருடைய நிலத்தில் எரிவாயுக் குழாய்களைப் பதித்ததால், அவர் அதிர்ச்சியடைந்து தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டிருக்கிறார். அந்தக் குடும்பத்திற்கு உதவும் வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கியிருப்பது இன்றைக்கு பெரும் ஆறுதலாக இருக்கிறது. அவருடைய குடும்பத்திற்கு அரசு வேலை வழங்கப்பட வேண்டும். அதேபோல GAIL நிறுவனம் விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய்களைப் பதிக்காமல், கேரளா மற்றும் கர்நாடகாவிலே பதித்திருப்பதுபோல தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி எரிவாயுக் குழாய்களைப் பதிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அரசினுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசினுடைய GAIL நிறுவனம், கேரளாவில் இருந்து கர்நாடகாவிற்கு எரிவாயுவைக் கொண்டு செல்வதற்காக விளைநிலங்களின் வழியாக எரிவாயுக் குழாய்களைப் புதைப்பதற்கான திட்டத்தைத் தீட்டியிருக்கின்றது. மாற்றுப்பாதையிலே கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் விவசாயிகள் பல ஆண்டுகளாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கழக அரசு அமைந்த பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, நான் 7 மாவட்ட விவசாயிகளையும் அழைத்து வைத்து, மாற்றுப்பாதையிலே எப்படிக் கொண்டு செல்லலாம் என்று கருத்துகளைக் கேட்டேன். அதனடிப்படையிலே விவசாய நிலங்கள் பாதிக்காதவகையிலே,

2022 ஏப்ரல் 18] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

ஒரு புதிய மாற்றுப்பாதையை வடிவமைத்து அந்த வழியாகக் கொண்டுசெல்லலாம் என்று அதன் வரைப்படத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் கொடுத்திருக்கின்றேன். துறைச் செயலாளர் அவர்களிடத்திலும் கொடுத்திருக்கின்றேன். மாற்றுப்பாதையிலே எரிவாயுக் குழாய்களைக் கொண்டு செல்வதால் விளைநிலங்கள் பாதிப்படையாமல் இருக்கும். விவசாயிகள் ஒப்புக்கொள்கிறார்கள். அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணியை மேற்கொண்டிருக்கின்றார். 7 மாவட்ட விவசாயிகளின் சார்பாக சங்க உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களை சென்னையில் வந்து சந்தித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு மாற்றாக என்ன செய்ய வேண்டுமென்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையிலே இந்த நிகழ்ச்சி நடந்துவிட்டது. ஒரு விவசாயி உயிரிழந்திருக்கின்றார். இதற்குப் பிறகு யாரும் உயிரிழக்கக்கூடாது. அதற்கான நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொள்ள வேண்டும். அந்த விவசாயினுடைய குடும்பத்திற்கு உடனடியாக 5 இலட்சம் ரூபாய் நிதியைக் கொடுத்து, "விவசாயிகளினுடைய காவலனாக நான் இருக்கிறேன்" என்ற வகையில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்; பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாற்றுப்பாதையிலே எரிவாயுக் குழாய்களைப் புதைப்பதற்கு அரசு விரைவில் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அரசினுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், என்ன சொல்லுங்கள். நீங்கள் பேசி விட்டீர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியை வழங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், GAIL நிறுவனத்திடம் நிறைய நிதி இருக்கிறது. GAIL நிறுவனம் அந்தக் குடும்பத்திற்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எண்ணெய் மற்றும் எரிவாயுக் குழாய்களை அமைப்பதற்கான 8 திட்டங்கள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. IOCL, HPCL, GAIL, BPCL போன்ற பல நிறுவனங்கள் அதில் ஈடுபட்டிருக்கின்றன. 4 திட்டங்கள் இப்பொழுது முடியக்கூடிய தருவாயில் இருக்கின்றன.

குறிப்பாக இப்போது, கிருஷ்ணகிரி பகுதியிலே எண்ணெய்க் குழாய்கள் அல்லது எரிவாயுக் குழாய்கள் அமைப்பதிலே பிரச்சினை ஏற்பட்டு, கரியப்பனஹள்ளி கிராமத்தில் விவசாயி திரு. கணேசன் அவர்கள் நேற்று தற்கொலை செய்துகொண்டார் என்ற துயரச் செய்தி வந்திருக்கிறது. பொதுவாக, இந்தப் பகுதியிலே நெடுஞ்சாலைகளின் ஓரங்களிலே இந்தக் குழாய்களை அமைக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. இதுகுறித்து ஒன்றிய அரசின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தினுடைய செயலாளர், நம்முடைய தொழில் துறையினுடைய கூடுதல் தலைமை செயலாளர், TIDCO–வினுடைய Managing Director மற்றும் இருக்கக்கூடிய எண்ணெய் நிறுவனங்களுடைய பிரதிநிதிகள் எல்லாம் கலந்துகொண்ட ஒரு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலே நாம் நெடுஞ்சாலைகளுடைய ஓரங்களில் எரிவாயுக் குழாய்களை அமைக்கலாம் என்று பேசி முடிவு செய்யப்பட்டது. இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே realignment செய்யப்பட்ட பாதை மூலமாக இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று பேச்சு வார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றபோது, இத்தகைய துயர சம்பவம் ஒன்று அங்கே நிகழ்ந்திருக்கிறது. அந்தத் துயர சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளபடியே மிகுந்த வேதனையடைந்து உடனடியாக அவர்களுக்கு தன்னுடைய ஆறுதலைத் தெரிவித்தவுடன், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பிவைத்து அவர்களுக்கு நிவாரணத் தொகையை வழங்கியிருக்கிறார்கள்.

நான் ஒன்றை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். மக்களுடைய நலன்களைக் காக்கக்கூடிய வகையில் அவர்களுடைய கருத்தைக் கேட்டறிந்து அவர்களுடைய முழு ஒத்துழைப்பையும் பெற்றுத்தான் எந்த ஒரு திட்டத்தையும் இந்த அரசு நிறைவேற்றும்

என்பதை மீண்டும் நான் இந்த அவையிலே உங்களிடத்திலே உறுதிபட தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருப்பதைப்போல, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வேளாண் பெருங்குடி மக்களுக்கு உற்றதோழனாக இந்த அரசு இருக்கும் என்கின்ற அவருடைய செய்தியையே நானும் என்னுடைய பதிலாகத் தெரிவித்து, நீங்கள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

பிற்பகல் 12–05

(இ) வேப்பனஹள்ளி தொகுதி, கொங்கனப்பள்ளி கிராமம், யானை தாக்கி விவசாயி உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. கொங்கனப்பள்ளி கிராமத்தில் திரு. திம்மப்ப நாயுடு என்பவர் யானை தாக்கி உயிரிழந்தது குறித்து அ.தி.மு.க.-வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், விதி எண் 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், சுருக்கமாக ஒரே வரியில் கவனத்தை ஈர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விதனமானப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட கொங்கனப்பள்ளி கிராமத்தில் 9–4–2022 அதிகாலை 5–00 மணியளவில் திம்மப்ப நாயுடு அவர்கள் தன்னுடைய மாடுகளுடன் சென்றிருக்கிறார். அப்போது அருகிலிருந்த யானை தாக்கி அந்த விவசாயி இறந்திருக்கிறார். அந்த விவசாயி இறந்தது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அவர்கள், தன்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விதனமானப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட கொங்கனப்பள்ளி